## January 5, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. வெனிசுலாவின் துணை அதிபராக இருந்த டெல்சி ரோட்ரிகஸ் நாட்டின் இடைக்கால அதிபராக பதவியேற்றார். அதிபர் நிக்கோலஸ் மடுரோவை அமெரிக்கா சிறைபிடித்து நாடு கடத்தியதைத் தொடர்ந்து, வெனிசுலா உச்சநீதிமன்ற உத்தரவுப்படி டெல்சி ரோட்ரிகஸ் இடைக்கால அதிபராகியுள்ளார்.

(i) டெல்சி ரோட்ரிகஸ் போதைப் பொருள் கடத்தலுக்கு உடந்தையாக இருந்ததாகக் கூறி வெனிசுலா மீது அமெரிக்கா கடந்த திடீர் தாக்குதல் நடத்தியது. அத்துடன் அதிபர் நிக்கோலஸ் மடுரோ, அவரது மனைவி சிலியா ஆகியோர் சிறைபிடிக்கப்பட்டு போர்க் கப்பலில் அமெரிக்காவுக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

(ii) இந்நிலையில், வெனிசுலாவின் இடைக்கால அதிபராக மடுரோவின் விசுவாசியும், அந்நாட்டு துணை அதிபராக இருந்தவருமான டெல்சி ரோட்ரிகஸ் பதவியேற்றுள்ளார். அந்நாட்டு உச்சநீதிமன்ற உத்தரவைத் தொடர்ந்து, அவர் இடைக்கால அதிபராகப் பொறுப்பேற்றுள்ளார்.

2. மதுரை அவனியாபுரத்தில் வருகிற 15-ஆம் தேதி ஜல்லிக்கட்டு போட்டி நடைபெறவுள்ள நிலையில், இதற்கான பணிகளை மாவட்ட நிர்வாகம் தொடங்கியது. தை மாதம் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, மதுரை மாவட்டத்தில் அவனியாபுரம், பாலமேடு, அலங்காநல்லூர் பகுதிகளில் தமிழர்களின் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு போட்டிகள் நடைபெறுவது வழக்கம்.

(i) நிகழாண்டு ஜல்லிக்கட்டு போட்டி வருகிற 15-ஆம் தேதி பொங்கல் தினத்தன்று மதுரை அவனியாபுரத்திலும், 16-ஆம் தேதி பாலமேட்டிலும், 17-ஆம் தேதி அலங்காநல்லூரிலும் நடைபெற உள்ளது.

3. கேலோ இந்தியாவின் 2-ஆம் ஆண்டு கடற்கரை விளையாட்டுகள் (பீச் கேம்ஸ்), தாத்ரா & நாகர் ஹவேலி மற்றும் டாமன் & டையு யூனியன் பிரதேசத்தில் திங்கள்கிழமை (ஜன. 5) தொடங்கு கின்றன.

(i) டையு நகரில் உள்ள கோக்லா கடற்கரையில் வரும் 10-ஆம் தேதி வரை நடைபெறவுள்ள இந்தப் போட்டிகளில், வாலிபால், கால்பந்து, செபாக்தக்ரா, கபடி, பென்காக் சிலாட், திறந்த நீர்நிலை நீச்சல் ஆகிய 6 பதக்கப் பிரிவு விளையாட்டுகளும், மல்லர் கம்பம், ‘டக் ஆஃப் வார் ஆகிய 2 கண்காட்சிப் பிரிவு விளையாட்டுகளும் உள்ளன. பதக்கப் பிரிவில் 32 தங்கப் பதக்கங்களுக்காக போட்டியாளர்கள் மோதுகின்றனர்.

(ii) இந்திய விளையாட்டு ஆணையம் மற்றும் தேசிய விளையாட்டு சம்மேளனங்கள் இணைந்து நடத்தும் இந்தப் போட்டிகளில், தமிழ்நாடு உள்பட, மொத்தம் 33

மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் இருந்து 1,100-க்கும் அதிகமான போட்டியாளர்கள் பங்கேற் கின்றனர்.

4. அணுமின் உற்பத்தியில் தனியார் நிறுவனங்களை அனுமதிக்கும் மசோதா அண்மையில் நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடரில் நிறைவேற்றப்பட்டது. அரசின் வசம் மட்டுமே இருந்த இந்த உற்பத்தியில் தனியார் நிறுவனங்களும் ஈடுபட அனுமதிக்கும் இந்த மசோதாவை நாடாளுமன்ற நிலைக்குழுவின் பரிசீலனைக்கு அனுப்ப எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின. ஆனால், 11 மணி நேரம் விவாதம் நடத்தி மசோதாவை மத்திய அரசு நிறைவேற்றியது. குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு ஒப்புதல் அளித்ததைத் தொடர்ந்து மசோதா சட்டமானது.

(i) தற்போது 8.78 ஜிகாவாட்டாக உள்ள அணுமின் உற்பத்தித் திறனை 2047-ஆம் ஆண்டுக்குள் 100 ஜிகாவாட்டாக உயர்த்துவதே இந்தச் சட்டத்தின் பிரதான நோக்கம் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. இதனால் நாட்டுக்கு 24 மணி நேரமும் மின்சாரம் கிடைக்க வழிவகை ஏற்படும் என்றும், அணுசக்தி உற்பத்தி பன்மடங்கு அதிகரிக்கும் என்றும் மத்தியில் ஆளும் கூட்டணி தெரிவித்துள்ளது.

(ii) இந்தச் சட்டம் நாட்டில் மின் உற்பத்தியை அபரிமிதமாக அதிகரிக்க வழிவகுக்கும். அத்துடன் அணுமின் உற்பத்தி துறைக்கு மூலதனத்தை ஈர்த்து கோடிக்கணக்கான ரூபாயையும், அணுசக்தி பொறியாளர்கள் முதல் கட்டுமானப் பொறியாளர்கள் வரை ஏராளமானோருக்கு வேலைவாய்ப்புகளையும் உருவாக்கும். மேலும், அணுசக்தி உற்பத்தியால் கார்பன் உமிழ்வைக் குறைத்து, பொருளாதார வளர்ச்சியை மந்தமாக்காமல் பருவநிலை மாற்றத்துக்கு எதிரான இலக்குகளை எட்ட வழியமைக்கும்.

(iii) மத்திய அணுசக்தி துறை இணையமைச்சர் ஜிதேந்திர சிங் கூறுகையில், 'சிறிய அணு உலைகளின் பயன்பாட்டை நோக்கி இந்தியா நகர்ந்து வருகிறது. புதிதாக தோன்றி வளரும் பொருளாதார மண்டலங்கள், தொழில் வழித்தடங்கள் உள்ளிட்டவற்றுக்கு அந்த உலைகள் பொருத்தமாக இருக்கும். இந்த உலைகள் எரிசக்தி பாதுகாப்பை வலுப்படுத்துவதுடன், சுற்றுச்சூழல் மீதான பொறுப்பையும் உறுதி செய்யும்' என்று தெரிவித்துள்ளார்.

(iv) இந்நிலையில் உருக்கு சிமெண்ட், செமிகண்டக்டர் கள், ஹைட்ரஜன் உற்பத்தி, தரவு மையங்கள் போன்ற துறைகளில் ஒரு நிறுவனம் தனது சொந்தப் பயன்பாட்டுக்கு மின்சார உற்பத்தியில் ஈடுபடுவதற்கு சிறிய அணு உலைகள் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். தற்போது நிலக்கரி மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்ய இறக்குமதியையே இந்தியா பெரிதும் சார்ந்துள்ளது. இந்நிலையில், சிறிய அணு உலைகளின் பயன்பாடு அனல் மின் நிலையங்களுக்கு விடைகொடுத்து, அதற்காகப் பயன்படுத்தப்பட்ட நிலங்களின் பயன்பாட்டை மாற்றியமைக்கும். இவை சட்டத்தில் உள்ள குறிப்பிடத்தக்க சாதகமான அம்சங்களாகும்.

(v) அணு அதேவேளையில், மின் நிலையங்களால் ஏதேனும் விபத்து (எடுத்துக்காட்டாக அணு உலை வெடித்து ஏற்படும் அணுக் கதிர் வீச்சால் மரணங்கள், உடல் நல பாதிப்புகள் ஏற்படுதல்) நேர்ந்தால், அதனால் பாதிக்கப்படுவோருக்கு அணுமின் நிலையத்தை இயக்கும் நிறுவனங்கள் இழப்பீடு வழங்க வேண்டும் என்பதே தற்போது உலக அளவில் நிலவும் கருத்து ஒற்றுமையாகும். விபத்துக்கான காரணம் என்ன, அதற்கு யார் காரணம் போன்றவற்றைக் கண்டறியும் வரை காத்திருக்காமல், பாதிக்கப்படுவோருக்கு உடனடியாக இழப்பீடு வழங்க வேண்டும் என்பதே தற்போதுள்ள ஏற்பாடாகும். அந்த விபத்து தனது நிர்வாக தவறால் ஏற்படவில்லை, அணுமின் நிலையத்தில் குறைபாடு கொண்ட கருவிகளால் ஏற்பட்டது என்பதை உறுதி செய்து அந்த நிறுவனங்களால் நிரூபிக்க முடிந்தால், அந்தக் கருவிகளை விநியோகித்த நிறுவனத்திடம் இருந்து அணுமின் நிலையத்தை இயக்கும் நிறுவனங்கள் இழப்பீடு கோரலாம்.

(vi) அணுசக்தியால் ஏற்படும் சேதத்துக்கு இழப்பீடு வழங்க வழிவகை செய்த முந்தைய சட்டத்தின்படி விபத்துக்கு காரணமான கருவி விநியோகித்த நிறுவனத்திடம் இருந்து 3 சூழல்களில் இழப்பீடு கோரலாம். அதாவது, அணுமின் நிலையத்தை இயக்கும் நிறுவனமும், கருவிகளை விநியோகித்த நிறுவனமும் வெளிப்படையாக ஒப்பந்தம் செய்துகொண்டிருந்தால், கருவிகளின் கோளாறு அல்லது அந்தக் கருவிகளை விதியோகித்த நிறுவனத்தால் அணுசக்தி விபத்து ஏற்பட்டது என்பது நிரூபிக்கப்பட்டால், அணுசக்தியால் பொதுமக்களுக்கும், பொதுச் சொத்துகளுக்கும் சுற்றுச்சூழலுக்கும் சேதம் ஏற்படுத்த வேண்டுமென்றே உள்நோக்கத்துடன் செயல்பட்டதன் விளைவாக விபத்து நிகழ்ந்தது தெரியவந்தால் இழப்பீடு கோரலாம். இந்நிலையில், கருவிகளின் கோளாறு அல்லது அந்தக் கருவிகளை விநியோகித்த நிறுவனத்தால் அணுசக்தி விபத்து ஏற்பட்டது என்பது நிரூபிக்கப்பட்டால் இழப்பீடு கோரலாம் என்ற அம்சம் அணுமின் உற்பத்தியில் தனியார் நிறுவனங்களை அனுமதிக்கும் புதிய சட்டத்தில் சேர்க்கப்படவில்லை.

(vii) முந்தைய சட்டத்தில் இடம் பெற்ற அந்த அம்சத்தால் அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற நாடுகளில் அணு உலைகளைத் தயாரிக்கும் நிறுவனங்கள் இந்தியாவுக்கு அணுஉலைகளை விநியோகிப்பதில் தயக்கம் காட்டின. இந்நிலையில், புதிய சட்டத்தில் அந்த அம்சமும், கருவிகளை விதியோகிக்கும் விநியோகஸ்தர்' என்ற வார்த்தையும்கூட இடம்பெற வில்லை.

(viii) அணுமின் உற்பத்தியின்போது ஏதேனும் விபத்து ஏற்பட்டால், அதற்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் அதிகபட்சமாக 300 மில்லியன் டாலர் (சுமார் ரூ.2.700 கோடி) அளிக்க வேண்டும் என்று மத்திய அரசு இழப்பீடு நிர்ணயித்துள்ளது.

5. புதிய வருமான வரிச் சட்டத்துக்கு வருமான வரித் துறை அதிகாரிகள் தயாராக வேண்டும் என மத்திய நேரடி வரிகள் வாரியத் (சிபிடிடி) தலைவர் ரவி அகர்வால் அறிவுறுத்தினார்.

(i) வருமான வரிச் சட்டம், 1961-க்குப் பதிலாக கொண்டுவ ரப்பட்டுள்ள புதிய வருமான வரிச் சட்டம், 2025 நிகழாண்டு ஏப்ரல் 1-ஆம் தேதி முதல் அமலாகவுள்ள நிலையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

6. வெனிசுலா நாட்டின் கச்சா எண்ணெய்த் துறை உள்கட்டமைப்பை மேம்படுத்தப்போவதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தெரிவித்திருப்பது இந்தியாவுக்கு பலனளிக்கும் என துறைசார் நிபுணர்கள் தெரிவித்தனர். இதுகுறித்து அவர்கள் மேலும் கூறியதாவது:

(i) உலகளவில் அதிக கச்சா எண்ணெய்யை இறக்குமதி செய்யும் மூன்றாவது நாடாக இந்தியா உள்ளது.

(ii) 2019-ஆம் ஆண்டுக்கு முன் ஒரு ஆண்டுக்கு 70 கோடி பீப்பாய் கச்சா எண்ணெய்யை வெனிசுலா ஏற்றுமதி செய்தது. அப்போது அதில் 32 சதவீதம் அமெரிக்காவுக்கும் இந்தியா மற்றும் சீனாவுக்கு 35 சதவீதமும் சென்றது. ஒரு நாளைக்கு 4 லட்சம் பீப்பாய்கள் வரை வெனிசுலா விடம் இருந்து இந்தியா கச்சா எண்ணெய்யை இறக்குமதி செய்தது.

(iii) அதன்பிறகு வெனிசுலா மீது பல்வேறு பொருளாதார தடைகளை அமெரிக்கா விதித்தது. இதைத்தொடர்ந்து வெனிசுலாவின் கச்சா எண்ணெய் ஏற்றுமதி 2025 தரவுகளின்படி ஓர் ஆண்டுக்கு 35 கோடி பீப்பாய்களாக குறைந்தது. இதில் 45 சதவீதத்தை சீனாவும் 31 சதவீதத்தை பிற நாடுகளும் இறக்குமதி செய்துள்ளன.

(iv) இந்திய எண்ணெய் மற்றும் எரிவாயு கழகத்தின்(ஒஎன்ஜிசி) விதேஷ் நிறுவனம் வெனிசுலாவின் சான் கிறிஸ்டோபல் எண்ணெய் நிறுவனத்துடன் இணைந்து கச்சா எண்ணெய் உற்பத்தியை மேற்கொண்டது. அமெரிக்கா தடையால் இதில் பாதிப்புகள் ஏற்பட்டன. இதனால் ரூ.9,000 கோடி நிலுவைத்தொகையை வெனிசுலா இந்தியாவுக்குச் செலுத்துவதில் தாமதம் நீடிக்கிறது.

(v) சான் கிறிஸ்டோபல் நிறுவனத்தின் பெரும் பங்குதாரரும் வெனிசுலா தேசிய கச்சா எண்ணெய் நிறுவனமுமான பெட்ரோலியஸ் டி வெனிசுலா எஸ்ஏவை தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் பணிகளை அமெரிக்கா மேற்கொள்ளத் தொடங்கியது.

(vi) இதன் காரணமாக வெனிசுலா மீது விதித்த தடையை அமெரிக்கா விலக்கிக்கொள்ள வாய்ப்புள்ளது. இதைத்தொடர்ந்து, வெனிசுலா வில் இருந்து இந்தியா மீண்டும் கச்சா எண்ணெய் இறக்குமதியில் ஈடு படலாம். நிலுவைத் தொகை பிரச்னைக்கும் தீர்வு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது என்றனர்.

(vii) ரஷியாவிடம் இருந்து அதிக கச்சா எண்ணெய் இறக்குமதி செய்வதாகக் குற்றஞ்சாட்டி இந்திய பொருள்கள் மீது 50 சதவீத வரியை அமெரிக்கா கடந்த ஆண்டு

விதித்தது குறிப்பிடத்தக்கது.

7. தென் அமெரிக்க நாடான வெனிசுலா, உலகிலேயே அதிக எண்ணெய் வளம் கொண்டது. அமெரிக்கா 4% எண்ணெய் இருப்பைக் கொண்டது என்றால், உலகின் மொத்த எண்ணெய் இருப்பில் சுமார் 18% வெனிசுலாவில் உள்ளது. வெனிசுலாவில் 303 பில்லியன் பீப்பாய் கச்சா எண்ணெய் இருப்பு உள்ளது என்றால், அமெரிக்காவின் இருப்பு 55 பில்லியன் பீப்பாய் கச்சா எண்ணெய் மட்டுமே. ஏற்றுமதி என எடுத்துக்கொண்டால், அமெரிக்கா ஆண்டுக்கு 125 பில்லியன் டாலர் மதிப்புக்கு கச்சா எண்ணெய்யை ஏற்றுமதி செய்கிறது; வெனிசுலா வெறும் 4 பில்லியன் டாலர்தான் ஏற்றுமதி செய்கிறது.

(i) வெனிசுலாவில் கச்சா எண்ணெய் இருப்பு இருந்தும் ஏற்றுமதி குறைவாக இருப்பதற்கு அந்த நாட்டின் மீதான அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகள் ஒரு காரணம். எண்ணெய் உள்கட்டமைப்பு மிக மோசமாக இருப்பதும், மடூரோ ஆட்சிக்கு வந்த பின்னர் அங்குள்ள எண்ணெய் ஆலைகள் மீது வெளிநாட்டு முதலீடுகள் குறைந்ததும் ஏனைய காரணங்கள். அமெரிக்க நிறுவனங்கள் வெனிசுலாவில் முதலீடு செய்தாலும், அரசியல் நிலையற்ற தன்மை காரணமாக எண்ணெய் உற்பத்தி அதிகரிக்க சுமார் ஐந்து ஆண்டுகளாவது ஆகலாம்.

(ii) அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும், தனியார்மய தாராளமயக் கொள்கைகளையும் எதிர்த்துப் போராடிய முன்னாள் அதிபர் ஹியூகோ சாவேஸ் ஆட்சிக் காலத்திலேயே அந்த நாட்டின் மீது குறிவைத்தது அமெரிக்கா. வெனிசுலாவில் உள்ள எண்ணெய் நிறுவனங்கள் அரசுக்குப் பெரும் பங்கைக் கொடுக்க வேண்டும் என்று 2007-இல் அதிபர் சாவேஸ் சட்டத் திருத்தம் கொண்டு வந்தார். இதை ஏற்க மறுத்து அமெரிக்க நிறுவனங்கள் பல அந்நாட்டிலிருந்து வெளியேறின.

(iii) அப்போது முதலே கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்து வெனிசுலாவின் பொருளாதாரம் வளர்ச்சியடையாமல் முடக்கியது அமெரிக்கா. எண்ணெய் வளம் இருந்தும் உலகின் ஏழ்மையான நாடுகளுள் ஒன்றாக இன்றளவும் வெனிசுலா இருப்பதற்கு அந்த நாட்டின் ஆட்சியாளர்களோ, மக்களோ காரணம் அல்ல; முழுக்க முழுக்க அமெரிக்காதான் காரணம். அதன் உச்சகட்டமாக அமெரிக்காவின் ஏகாதிபத்திய தாக்குதலுக்கு இப்போது இரையாகி இருக்கிறது வெனிசுலா.